வண்ணாரப்பேட்டை - திருவொற்றியூர் இடையே

# புதிய மெட்ரோ ரயில் தடத்தில் பாதுகாப்பு ஆணையர் குழு ஆய்வு

■ சென்னை

வண்ணாரப்பேட்டை - திருவொற்றியூர் மெட்ரோ ரயில் வழித்தடத்தில் ரயில்வே பாதுகாப்பு ஆணையர்கள் குழுவினர் 3 நாள் ஆய்வுப் பணிகளை நேற்று தொடங்கினர்.

சென்னையில் அடுத்தகட்டமாக வண்ணாரப்பேட்டை - திருவொற்றியூர் இடையே முதல்கட்ட மெட்ரோ ரயில் விரிவாக்க திட்டப்பணிகள் ரூ.3,700 கோடியில் நடைபெற்று வருகின்றன. மொத்தம் 9 கி.மீ தொலைவுள்ள இந்த வழித்தடத்தில் சர் தியாகராயா கல்லூரி, கொருக்குப்பேட்டை, தண்டையார்பேட்டை உள்ளிட்ட 7 இடங்களில் ரயில் நிலையங்கள் அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இந்த தடத்தில் மெட்ரோ ரயில்களை இயக்கி சமீபத்தில் சோதனை ஓட்டமும் நடைபெற்றது.

இந்நிலையில், இந்த தடத்தில் மெட்ரோ ரயில் பாதுகாப்பு ஆணையர் அபய்குமார் ராய் மற்றும் 3 பாதுகாப்பு துணை ஆணையர்கள் வண்ணாரப்பேட்டையில் இருந்து தண்டையார்பேட்டை வரையிலான சுரங்கப்பாதை பணிகளை ஆய்வு செய்தனர். அவர்களுடன் சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் நிர்வாக இயக்குர் பிரதீப் யாதவ், இயக்குநர்கள் ராஜீவ் நராயண் திவேதி, ராஜேஷ் சதுர்வேதி, தலைமை பொதுமேலாளர் விஜய்குமார் சிங் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

முதல் நாளான நேற்று மெட்ரோ ரயில் நிலையத்தின் உட்புறத்தோற்றம், பல்வேறு கட்டுமான பணிகள், இயக்கு முறைகள், நடைபாதை தீயணைப்பு செயல்பாடு, காற்றோட்ட வசதி, நீர் உறிஞ்சு ஏற்பாடுகள், அளவீடுகள், பயணிகளுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள், அவசரத் தொலைபேசி வசதிகள், அறிவிப்பு பலகைகள், மின்தூக்கிகள், நகரும் படிக்கட்டுகள், ரயில் தண்டவாளத்தின் அமைப்பு மற்றும் சிக்னல் அமைப்பு உள்ளிட்டவை குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டன.

எஞ்சியுள்ள பகுதிகளில் இன்றும், நாளையும் ஆய்வு பணிகள் மேற்கொள்ளப்படும். இறுதிகட்டமாக மெட்ரோ ரயிலை வேகமாக இயக்கி, சோதனையும் நடத்தப்பட உள்ளது. அதன்பிறகு, பாதுகாப்பு ஆணையர்கள் கொண்ட குழுவினர் மெட்ரோ ரயில் இயக்குவதற்கான ஒப்புதலை அளிப்பார்கள். இதையடுத்து, மெட்ரோ ரயில் சேவை மக்களின் பயன்பாட்டுக்கு திறக்கப்படும்.